## காட்டுவதின் மூலம் மறைப்பது

*இதுவரை நிதர்சனமான விஷயங்களைப் பற்றிப் பேசினேன். இப்போது, அவ்வளவு தெளிவாகப் புலனாகாததை நோக்கிச் சென்று, மிகவும் விந்தையான வகையில், ஒன்றைக் காட்டுவதின் மூலமே தொலைக்காட்சியால் எப்படி அதை மறைக்க முடியும் என்பதையும், அதாவது, அது செய்ய வேண்டியதை—உதாரணமாக, தகவல் அளிப்பதை—செய்தால்*

*எதைக் காட்ட வேண்டியிருக்குமோ அதை விட்டுவிட்டு வேறு ஒன்றைக் காட்டுவதன் மூலம் எப்படி, காட்ட வேண்டியதை மறைக்க முடியும் என்பதையும் சொல்ல ஆசைப்படுகிறேன். இன்னும் சொல்லப்போனால், காட்டப்பட வேண்டியதையே காட்டுவதுபோல் இருந்தாலும், அதைக் காட்டும் விதத்தில் அது காட்டப்படாமலேயே போய்விடுகிறது அல்லது அது முக்கியத்துவமற்றதாக ஆக்கப்பட்டோ அல்லது அந்தத் தகவல் அமைக்கப்பட்டிருக்கும் விதத்தில் யதார்த்தத்திற்குப் புறம்பான ஒரு அர்த்தம் அதற்குக் கற்பிக்கப்பட்டோ விடுகிறது.*

*இதுபற்றிப் பேசுகையில், பாட்ரிக் ஷாம்பாய்னின் (Patrick Champagne) ஆய்வுப் பணிகளிலிருந்து இரண்டு உதாரணங்களை எடுத்துக்கொள்கிறேன். 'உலகின் ஏழ்மை' என்ற புத்தகத்தில் 'புறநகர்ப் பகுதி நிகழ்வுகள்'[3] என்று சொல்லப்படும் நிகழ்வுகள் ஊடகங்களால் எப்படிச் சித்தரிக்கப்படுகின்றன என்பது குறித்து ஒரு அத்தியாயத்தையே எழுதியிருக்கிறார். இதழாளர்கள் தங்கள் துறைக்கே உரித்தான இயல்பான தன்மைகளினாலும், உலகைப் பற்றிய அவர்களின் பார்வையினாலும், அவர்கள் பெற்ற பயிற்சியினாலும், அவர்களுடைய விருப்பு-வெறுப்புகளினாலும் மட்டுமன்றி, அவர்களுடைய தொழிலின் தர்க்க நியதிகளாலும் ஈர்க்கப்பட்டு, தனித்த விசேஷத் தன்மை கொண்ட புறநகர்ப் பகுதி வாழ்க்கை என்ற யதார்த்த உலகிலிருந்து தங்களுக்கே உரித்தான பல கண்ணோட்ட வகைகளில் முற்றிலும் தனித்தன்மை வாய்ந்த ஒரு அம்சத்தை*

மட்டும் எப்படித் தேர்ந்தெடுக்கிறார்கள் என்பதை விளக்குகிறார். எதைப் பார்க்கிறோம், எதைப் பார்ப்பதில்லை என்பதை முடிவுசெய்து, பார்க்கப்படுவதைத் தீர்மானிக்கும், கண்ணுக்குப் புலப்படாத அமைப்புகளான இந்தக் கண்ணோட்ட வகைகள் என்கிற கருத்தை விளக்கப் பேராசிரியர்கள் எல்லாரும் பொதுவாகக் கையாளும் உருவகம்: மூக்குக்கண்ணாடிகள். இந்தக் கண்ணோட்ட வகைகள் நமது கல்வி, வரலாறு இவற்றிலிருந்து தோன்றியவை. தங்களிடமுள்ள விசேஷ 'மூக்குக்கண்ணாடிகள்' மூலம் இதழாளர்கள் சிலவற்றைப் பார்ப்பார்கள், பிறவற்றைப் பார்க்க மாட்டார்கள்; பார்ப்பவற்றைக்கூட ஒரு குறிப்பிட்ட

விதத்தில்தான் பார்க்கும் ஒரு தேர்வைச் செய்து, தேர்வுசெய்யப்பட்டதிலிருந்து ஒரு கட்டுமான வேலையையும் இதழாளர்கள் செய்கிறார்கள்.

இந்தத் தேர்வின் அடிப்படை விதி என்னவென்றால் பரபரப்பான, மிகவும் பிரமிக்கவைக்கிற நிகழ்வுகளைத் தேடிக் கண்டுபிடிப்பதுதான். **மிகைப்படுத்துதல்** தொலைக்காட்சிக்கு இரண்டு விதங்களில் அவசியமாகிறது: பிம்பங்களைக் கொண்டு ஒரு நிகழ்வைக் காட்சியமைத்துக் காட்டுவது ஒரு விதம். இரண்டு, அதன் முக்கியத்துவம், தீவிரம், சோகமான அதன் நாடகத்தன்மை ஆகியவற்றை மிகைப்படுத்துவது. புறநகர்ப் பகுதிகளைப் பொறுத்தவரை சுவாரஸ்யமளிக்கக்கூடியது அங்கு நடக்கும் கலவரங்கள்தான். ஏற்கனவே, கலவரம் என்பதே ஒரு பெரிய சொல்... (சொற்களைக் குறித்தும் இதே போல ஆய்வுசெய்திருக்கிறார்கள். சாதாரண சொற்களைக் கொண்டு, 'நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தினரையோ', 'பாமர மக்களையோ' வாய்பிளக்கவைக்க முடியாது. அதற்கு அசாதாரணமான சொற்கள் அவசியம். குறிப்பாக, மிக வினோதமான முறையில், பிம்பங்களின் உலகம் சொற்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது. தலைப்பு இல்லையென்றால் புகைப்படம் ஒன்றுமே இல்லை; அதாவது, எதைப் படிக்க வேண்டும் என்று சொல்லும் தலைப்புகள்; அல்லது பெரும்பாலான சமயங்களில் எதை வேண்டுமானாலும் பார்க்கச்செய்யும் தலைப்புகள். பெயரிடுவதே ஒன்றைப் பார்க்கச்செய்வது, உருவாக்குவது, அதற்கு இருத்தல் அளிப்பதுதான் என்று

நமக்குத் தெரியும். மேலும், சொற்கள் பேரழிவை ஏற்படுத்தக்கூடும்: ஸ்கார்ஃப்[4] என்பதை எப்படி வர்ணிக்கிறோம் என்பதுபோல—இஸ்லாமிய? இஸ்லாமியவாத? சாதாரணமாகத் தலையில் அணியும் துண்டுதான் அது, **வேறொன்றுமில்லை** என்று எடுத்துக்கொண்டால்? தொலைக்காட்சியில் நிகழ்ச்சி அளிப்பவர்களின் **ஒவ்வொரு சொல்லையும்** விமரிசிக்க வேண்டும் என்று எனக்கு ஆவல் எழுகிறது. ஏனென்றால், தாங்கள் குறிப்பிடும் விஷயங்களின் சிக்கல்கள், தீவிரம்பற்றிச் சிறிதும் கவலைப்படாமலும், ஆயிரக்கணக்கான தொலைக்காட்சிப் பார்வையாளர்கள் முன்பு அவற்றைக் குறிப்பிடுவதால் தாங்கள் சந்திக்க வேண்டிய

பொறுப்புகளைச் சற்றும் புரிந்துகொள்ளாமலும், தாங்கள் புரிந்துகொள்ளவில்லை என்பதைக்கூடப் புரிந்துகொள்ளாமலும் மேலோட்டமாக அவர்கள் பேசுகிறார்கள். ஏனென்றால், சொற்கள் பல காரியங்களைச் செய்யும்: மாயைகள், பயங்கள், மனப்பிராந்திகள் ஆகியவற்றை ஏற்படுத்தும்; அல்லது, குறைந்தபட்சம், தவறான அர்த்தங்களைக் கொடுக்கும்.) மொத்தத்தில் இதழாளர்கள் அசாதாரணமான விஷயங்களில், அசாதாரணம் என்று **தங்களுக்குத்** தோன்றக்கூடியவற்றில் ஆர்வம் காட்டுகிறார்கள். மற்றவர்களுக்கு மிகச் சாதாரணமாக இருப்பவை இவர்களுக்கு அசாதாரணமாக இருக்கக்கூடும்; அல்லது மாறியும் இருக்கும். இவர்கள் நாட்டம் கொள்வது அசாதாரணமானவற்றில்; சாதாரணத்திலிருந்து பிரிந்து விலகியிருப்பவற்றில்; தினசரி வழக்கமான நிகழ்வாக இல்லாதவற்றில். நாளேடுகள் அன்றாட விஷயங்களுக்கு அப்பால் நாள்தோறும் ஏதாவது கொடுத்துக்கொண்டே இருக்கவேண்டுமென்றால் அது எளிதல்ல. ஆகவேதான், சாதாரண அசாதாரணங்களுக்கு, அதாவது, சாதாரண எதிர்பார்ப்புகள் எதிர்பார்க்கும் தீ விபத்துகள், வெள்ளம், கொலை, துணுக்குச் செய்திகள் போன்றவற்றுக்கு நாளேடுகள் முக்கியத்துவம் அளிக்கின்றன. ஆனால், அசாதாரணம் என்பது, மற்ற நாளேடுகளுடன் ஒப்பிடுகையில் சாதாரணமாக இல்லாததும், அப்படி இல்லாதவை மட்டுமேயாகும். சாதாரணத்திலிருந்து மாறுபட்டிருப்பது, மற்ற நாளேடுகள் வழக்கமாகச் சொல்வதிலிருந்து அல்லது சாதாரண விஷயங்களைப் பற்றிச் சொல்வதிலிருந்து மாறுபட்டு இருப்பதுவேயாகும். இது ஒரு கடுமையான

தளை: **எல்லோருக்கும் முந்தி** (*scoop*) என்பது நிர்ப்பந்தப்படுத்தும் தளை. ஏதாவதொன்றைத் தாங்கள்தான் முதலில் பார்த்தோம், முதலில் பார்க்கச்செய்தோம் என்று இருக்க வேண்டும் என்பதற்காகவே கிட்டத்தட்ட எதை வேண்டுமானாலும் செய்யத் தயாராக இதழாளர்கள் இருக்கிறார்கள். மற்றவர்களை முந்திக்கொள்ள வேண்டும் என்பதற்காகவோ அவர்கள் செய்வதற்கு முன் செய்துவிட வேண்டும் என்பதற்காகவோ அல்லது அவர்களிடமிருந்து மாறுபட்டு வேறு விதமாகச் செய்ய வேண்டும் என்பதற்காகவோ ஒருவரையொருவர்

காப்பியடிப்பதால், எல்லோரும் முடிவில் ஒரே மாதிரியாகத்தான் செய்கிறார்கள். மேலும், மற்ற களங்களில் அசலானதான, தனித்தன்மை வாய்ந்தவற்றை உருவாக்குகிற புதியதற்கான தேடல் என்ற செயல் இங்கு எல்லாவற்றையும் ஒரே சமமாக்கி, மிகச் சாதாரணமாக ஆக்கிவிடுவதில் போய் முடிகிறது.

அசாதாரணத்தை இப்படி உள்நோக்கத்துடன் தீவிரமாகத் தேடிப்போவதால் நேரடியான அரசியல் உத்தரவுகளினாலோ அல்லது விலக்கிவைக்கப்பட்டுவிடுவோம் என்ற பயத்தினால் உந்தப்பட்டு மேற்கொள்ளும் சுயதணிக்கைகளினாலோ ஏற்படும் அதே அளவுக்கு அரசியல் ரீதியான விளைவுகள் ஏற்படக்கூடும். தொலைக்காட்சியில் காட்டப்பட்டுவிட்ட காட்சி என்ற இந்தத் தனிப்பெரும் சக்தியை வைத்துக்கொண்டு இதழாளர்களால் உருவாக்க முடியும் விளைவுகளுக்கு இணையாக வேறு எதுவும் இல்லை. யாருக்குமே, குறிப்பாக மற்றவர்களைவிட இன்னும் குறைந்த அளவில் இதழாளர்களுக்கு, புறநகர்ப் பகுதியின் உப்புச்சப்பற்ற, அழுதுவடியும் அன்றாடக் காட்சிகள் புதிதாக ஒன்றும் சொல்வதில்லை, எந்த ஆர்வத்தையும் தூண்டுவதில்லை. ஆனால், புறநகர்ப் பகுதிகளில் உண்மையில் என்ன நடக்கிறது என்பதில் அவர்கள் அக்கறை கொண்டாலும், உண்மையிலேயே அதை அவர்கள் காண்பிக்க விரும்பினாலும், அது மிகவும் கடினமாகவேதான் இருக்கும். புறநகர்ப் பகுதிகளின் உண்மை நிலையை உணரச்செய்வதைவிடக் கடினமானது எதுவும் இல்லை. ஃப்லோபெர் (Flaubert) அடிக்கடி சொல்வார்: “சாமானியமானதைச் சரியாகச் சித்தரிக்க வேண்டியது அவசியம்.” சமூகவியலாளர்கள்

எதிர்கொள்வதும் இதே பிரச்சினைதான்: சாதாரணமானவற்றை அசாதாரணமாக்குவது; சாமானியத்தை விவரிக்கும் விதத்திலேயே அது எந்த அளவுக்கு அசாதாரணமாக இருக்கிறது என்று மக்களைப் பார்க்கச்செய்வது.

தொலைக்காட்சியை அன்றாடம் பார்ப்பதில் பொதிந்துகிடக்கும் அரசியல் ரீதியிலான அபாயங்கள் எதனால் ஏற்படுகின்றன என்றால், திரையில் தோன்றும் காட்சிக்கு இலக்கிய விமர்சகர்கள் குறிப்பிடும் **யதார்த்தத் தன்மையை உண்டுபண்ணும் விசேஷத் திறன்** உண்டு என்பதால்தான். ஒன்றைப் பார்க்கச்

செய்து, தான் பார்க்கச்செய்ததை நம்பவைக்கும் தன்மை. மனக்கண்முன் நிறுத்தும் இந்தச் சக்திக்கு அணிதிரட்டும் ஆற்றல்கள் உண்டு. கருத்துகள், அவற்றின் வடிவாக்கங்கள் தவிர, சில குழுக்களையும் இருத்தல் பெறச்செய்ய இந்தச் சக்தியினால் முடியும். இனவெறி, வேற்று நாட்டவரை வெறுப்பது, வெளி தேசத்தவரிடம் பயம்-வெறுப்பு போன்ற, பெரும்பாலும் எதிர்மறையான தீவிர உணர்ச்சிகளை உசுப்பிவிடுவதற்குச் சாதகமான, தார்மீக, அரசியல் உள்அர்த்தங்கள் சாதாரணத் துணுக்குச் செய்திகளிலும், அன்றாட நிகழ்வுகளிலும், விபத்துகளிலும் செறிந்திருக்க வாய்ப்பு உண்டு. வெறும் செய்தி விவரணை, செய்திகளைச் சேகரித்து அளிக்கும் செயல், **நிருபர்** என்ற முறையில் **பதிவுசெய்வது** சமூக ரீதியில் யதார்த்தத்தைக் கட்டுமானம் செய்கின்றன. இவை எல்லாமே அணிதிரட்டுவது (அல்லது கலைத்துவிடுவது) ஆகிய சமூக விளைவுகளை ஏற்படுத்த முடியும்.

பாட்ரிக் ஷாம்பாய்னிடமிருந்து நான் எடுத்துக்கொள்ளும் இன்னுமொரு உதாரணம், 1986இல் நடந்த பள்ளிச் சிறுவர்களின் வேலை நிறுத்தம்[5]. இதில், இதழாளர்கள் தங்களுடைய ஆர்வங்கள்—அதாவது, அவர்களை ஆர்வம் கொள்ளச்செய்யும் விஷயங்கள்—விருப்பு-வெறுப்புகள், பலதரப்பட்ட பார்வைகள், மதிப்பீடுகள், தங்களை அறியாமலேயே இடம்கொடுத்த எதிர்பார்ப்புகள் ஆகியவற்றினால் இழுத்துச்செல்லப்பட்டார்கள். இப்படி நடப்பதன் மூலம் இதழாளர்கள் என்னதான் நல்லெண்ணத்துடனும் வெகுளித்தனத்துடனும் இருந்தாலும், யதார்த்தம் போன்ற தோற்றங்களையும், யதார்த்தத்தில் இல்லாத

*சில தன்மைகளையும், யாருமே விரும்பாததையும் சில சமயங்களில் பெரும் சேதங்களை உண்டாக்கும் விளைவுகளையும் அவர்கள் எப்படி ஏற்படுத்தக்கூடும் என்பதைப் பார்க்க முடிகிறது. பிரான்சின் 1968 மே மாத நிகழ்வுகளும்*[6]*, 'மற்றொரு 1968'ஐத் தவறவிட்டுவிடுவோமோ என்கிற பயமும் இதழாளர்கள் மனதை ஆக்கிரமித்துக்கொண்டிருந்தன. தங்கள் செயலைப் பற்றிப் பிரமாதமாக ஒன்றும் சொல்லத் தெரியாத, அரசியலில் ஈடுபடுத்தப்படாத விடலைச் சிறுவர்கள் பற்றிய விவகாரம்தான் அந்த வேலை*

*நிறுத்தம். ஆனாலும், அந்தச் சிறுவர்களிடையே (மற்றவர்களைக் காட்டிலும் அரசியல் ஈடுபாடு அதிகம் கொண்ட) பிரதிநிதிகளை உருவாக்கி, அவர்களுக்கு மிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டதால் அவர்களும் தங்களை முக்கியமானவர்களாகக் கருதிக்கொண்டுவிட்டார்கள். ஆக, நிகழ்வுகளைப் பதிவுசெய்யும் ஒரு கருவியாகத் தன்னை அறிவித்துக்கொள்ளும் தொலைக்காட்சி சிறிதுசிறிதாக, யதார்த்தத்தை உருவாக்கும் கருவியாக ஆகிவிடுகிறது. சமூக வாழ்க்கை தொலைக்காட்சியால்தான் விவரிக்கப்பட்டு-பரிந்துரைக்கப்படுகிறது. நாம் மேலும்மேலும் எந்தப் பிரபஞ்சங்களை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறோமோ, அங்கு சமூக, அரசியல் இருத்தலுக்கு அனுமதி அளிக்கும் நடுவராகத் தொலைக்காட்சி ஆகிவிடுகிறது. உதாரணத்திற்கு, 50 வயதில் ஓய்வுபெறும் உரிமைக்காக நான் போராட விரும்புகிறேன் என்று வைத்துக்கொள்வோம். சில வருடங்களுக்கு முன்புவரையில் கோரிக்கை அட்டைகளை ஏந்தி, அணிவகுத்துச் சென்று, தேசியக் கல்வி அமைச்சரகத்திற்குமுன் போராட்டம் நடத்தியிருப்பேன்; இன்றோ—நான் மிகைப்படுத்தவில்லை—சாமர்த்தியமான ஒரு தகவல் ஆலோசகரை அணுகியாக வேண்டும். ஊடகங்களின் பார்வைக்காக, அவற்றைக் கவரக்கூடிய சிலவற்றை—வேஷங்களோ முகமூடிகளோ—செய்தாக வேண்டும். இறுதியில், 50,000 பேர்கள் கொண்ட போராட்டம் ஏற்படுத்துவதிலிருந்து அதிகம் விலகியிராத அதே விளைவு தொலைக்காட்சி மூலம் கிடைத்துவிடுகிறது.*

அன்றாட விவகாரங்கள் என்ற அளவிலாகட்டும், உலக அளவிலாகட்டும், உலகத்தைப் பற்றிய கண்ணோட்டம் குறித்த சில கருத்துகளைத் திணிக்கும் திறன், அரசியல் போராட்டங்களில் வைக்கப்படும் பணயங்களில் ஒன்று. இளைஞர்கள்-முதியவர்கள், வெளிநாட்டவர்கள்-பிரெஞ்சுக்காரர்கள் போன்ற பிரிவுகளைச் சார்ந்து மக்கள் தங்கள் உலகை எப்படிப் பார்க்கிறார்களோ அதற்குரிய கண்ணாடிகளை இந்தத் திறன் அவர்கள்மீது திணிக்கிறது. இந்தப் பிரிவுகளை ஏற்படுத்துவதன் மூலம், தங்களுக்குள்ளேயே அணிதிரட்டிக்கொள்ளும் குழுக்கள் உண்டாக்கப்பட்டு, அதன் மூலம் அக்குழுக்கள் தங்கள் இருத்

தலை மற்றவர்கள் ஒப்புக்கொள்ளும்படிசெய்து, நெருக்கடி உண்டாக்கி, சில சலுகைகளைப் பெற முடிகிறது. இன்று, இது போன்ற போராட்டங்களில், தொலைக்காட்சி ஒரு திட்டவட்டமான பங்குவகிக்கிறது. தொலைக்காட்சியைக் கணக்கிலெடுத்துக்கொள்ளாமல் வெறும் பேரணியை நடத்தினால் போதும் என்று இன்னமும் நம்பிக்கொண்டிருப்பவர்கள் தங்கள் முயற்சியில் தோற்றுவிடும் அபாயத்தில் இருக்கிறார்கள்: இப்போதெல்லாம், தொலைக்காட்சிகளுக்காக மேலும்மேலும் பேரணிகள் நடத்தப்பட வேண்டும். அதாவது, தொலைக்காட்சியினரின் கண்ணோட்டப் பிரிவுகளுக்கு ஏற்றவாறு அவர்கள் ஆர்வம் கொள்ளும் வகையில் அமைந்த பேரணிகள்; அவர்களால் அஞ்சல் செய்யப்பட்டு, பெரிதுபடுத்தப்படுவதனால் முழுமையான பயனைத் தரக்கூடிய பேரணிகள்.